**தேசிய வீதி வலையமைப்பின் பிரதான பாலங்கள் நிர்மாணச் செயற்திட்டம் (37 பிரதான பாலங்கள் நிர்மாணச் செயற்திட்டம்) 2017**

---

தேசிய வீதி வலையமைப்பின் பிரதான பாலங்கள் நிர்மாணச் செயற்திட்டத்தின் (37 பிரதான பாலங்கள் நிர்மாணச் செயற்திட்டம்) 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இச் செயற்திட்டமானது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் (ஜேஐசீஏ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 மார்ச் 14 ஆம் திகதிய எஸ்எல்-பி 108 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்றது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது. தேசிய வீதிகளில் பிரதான பாலங்களை நிர்மாணிப்பதன் மூலம் தேசிய வீதி வலையமைப்பை முன்னேற்றுவதும் அதன் மூலம் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல் செயற்திட்டத்தின் நோக்கமாக உள்ளது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 27,250 மில்லியனிற்குச் சமமான ஜப்பான் யென் 16,132 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 20,914 மில்லியனிற்குச் சமமான ஜப்பான் யென் 12,381 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2013 மார்ச் மாதத்தில் ஆரம்பித்திருந்ததுடன் 2019 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக்

கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

----------------------------

### 2.1. அபிப்பிராயம்

----------------------

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கங்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

------------------------------------------------------------------

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடு

-----------------------------------------

கணக்காய்வில் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) செயற்திட்டத்தின் சிவில் நிர்மாண வேலைகளில் ஈடுபடுத்தப்பட்ட ஒப்பந்தகாரர்களினூடாக ரூபா 33.5 மில்லியன் கிரயத்தில் மீளாய்வாண்டின் போது செயற்திட்டம் 4 மோட்டார் வாகனங்களை கொள்வனவு செய்திருந்ததுடன் இது உரிய சொத்துக்களின் பல்வேறுபட்ட வாழ்க்கைக் காலத்தை கருத்திற்கொள்ளாமல் சிவில் நடைமுறை வேலைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2017 திசெம்பர் இல் மேற்கொள்ளப்பட்ட ஜப்பான் ஜென் 154.5 மில்லியன் கூட்டுத்தொகையான இடைக்காலக் கொடுப்பனவுகளானது உரிய மாதங்களில் நிலவியிருந்த உண்மையான நாணயமாற்று விகிதத்தை பின்பற்றுவதற்கு பதிலாக ரூபா 1.0825 மற்றும் ரூபா 1.2714 நாணயமாற்று விகிதங்களில் மாற்றியிருந்தது. இதன் விளைவாக சிவில் வேலைகளின் கிரயம் மற்றும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ஒப்பந்தகாரர்களுக்கு செலுத்த வேண்டியவைகள் ரூபா 43.43 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2017 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் - 2017 ஆம் ஆண்டின் போது | | பயன்படுத்திய நிதிகள் - 2017 திசெம்பர் 31 வரை | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஜென் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஜென் மில்லியன் | ரூபா மில்லியன் | ஜென் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஜேஐசீஏ | 12,381 | 20,914 | 2,694 | 1,963.38 | 2,680 | 5,634.87 | 7,169.90 |
| இலங்கை அரசாங்கம் | 3,751 | 6,336 | 300 | 125.50 | 167 | 297.80 | 396.20 |
| **மொத்தம்** | **16,132** | **27,250** | **2,994** | **2,088.88** | **2,847** | **5,932.67** | **7,566.10** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டம் விரிவான திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரித்தமையால் சரியான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் செயற்திட்ட நோக்கங்களை உரிய நேரத்தில் அடைவதற்கும் செயற்திட்டத்தின் செயன்முன்னேற்றத்தை முழுமையாக மேற்பார்வை செய்து மதிப்பீடு செய்ய முடிந்திருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 20,914 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 12,381 மில்லியன் மொத்த தொகையில் 46 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 7,170 மில்லியனிற்குச் சமமான ஜப்பான் ஜென் 5,635 மில்லியன் கடன் பெறுகைகளை பயன்படுத்தியிருந்தது. ஆகையால் மிகுதித் தொகையான ஜப்பான் ஜென் 6,746 மில்லியனை செயற்திட்ட மிகுதிக்காலப்பகுதியின் போது பயன்படுத்தும் சாத்தியத்தன்மை ஐயத்திற்குரியதாகவிருந்தது.

(இ) வேலைப் பட்டியல்களை அடிப்படையாகக் கொண்ட செயற்திட்டத்திற்கான மீளாய்வாண்டிற்கான விரிவான பாதீடானது செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால், வரிசை அமைச்சின் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 300 மில்லியன் தொகையான ஒதுக்கீட்டில் ரூபா 126 மில்லியன் தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 3.2 பௌதீக செயன்முன்னேற்றம்

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், 05 ஒப்பந்த பொதிகளின் கீழ் 19 தேசிய வீதிகள் மீது 37 புதிய பாரிய பாலங்களை நிர்மாணிப்பதற்கும் மீளாய்வாண்டின் இறுதியளவில் பூர்த்தியாக்குவதற்கும் பட்டியலிடப்பட்டது. பொதி 01 இன் கீழ் ரூபா 7,098 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்படுவதற்கு பட்டியல்படுத்தப்பட்ட 10 பாலங்களில் 09 பாரிய

பாலங்களின் நிர்மாணம் தொடர்பான வேலைகள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எனினும், பொவ்வாதுமொடறவிலுள்ள 02 பாலங்களின் நிர்மாண வேலைகள் மற்றும் பொதி 01 இன் கீழுள்ள கொழும்பு - காலி - அம்பாந்தோட்டை - வெல்லவாயா வீதியின் கோவியப்பின் பாலத்தின் நிர்மாண வேலைகள் 150 நாட்கள் காலதாமதத்துடன் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. ரூபா 3,786 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயமொன்றில் பொதி - 02 இன் கீழுள்ள 08 பாரிய பாலங்களின் நிர்மாணம் தொடர்பான செயன்முன்னேற்றம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 34 சதவீதத்திலிருந்து 57 சதவீத வீச்சிலிருந்தது. மேலும், ஏனைய 03 பொதிகளின் கீழுள்ள ஏனைய 19 பாரிய பாலங்களின் வேலைகள் வடிவமைத்தல் மற்றும் கட்டமைப்பு கட்டங்களில் மீதமாகவிருந்தது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொதி - 01 இன் கீழ் நிர்மாணிக்கப்பட வேண்டியிருந்த பாரிய பாலங்களின் அளவீட்டுப் பட்டியல்கள் முறையான விரிவான பொறியியல் கற்கைகள் இல்லாமல் செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. உரிய பாரிய பாலங்களின் நிர்மாண வேலைகள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும், அளவீட்டுப் பட்டியலில் உள்ளடக்கப்பட்ட ரூபா 374.39 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்திலான 660 விடயங்களிலான வேலைகளானது செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது. மேலும், 244 விடயங்களின் நோக்கெல்லைகள் அதிகரிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 272.48 மில்லியன் மேலதிக கிரயம் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கடன் உடன்படிக்கையின் 2(4) ஆம் பிரிவின் 04 ஆம் பட்டோலையின் பிரகாரம் செயற்திட்டத்தின் சிவில் நிர்மாண வேலைகளின் மொத்தக் கிரயத்தின் 30 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஜப்பான் பொருட்கள் மற்றும் சேவைகள் போன்றன பாலங்களை நிர்மாணித்தல் நோக்கங்களிற்காக பயன்படுத்த வேண்டும். எனினும், அதற்காக பயன்படுத்துவதற்கு தேவையான ஜப்பான் பொருட்கள் மற்றும் சேவைகளை இனங்காண்பதற்கு செயற்திட்டத்தால் எந்தவித பொறிமுறையும் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டமானது ரூபா 485 மில்லியன் கிரயத்தில் 90 மீற்றர் நீளம் 10.40 மீற்றர் அகலத்துடன் உருக்கு பாலமொன்றை நிர்மாணித்திருந்ததுடன் கடன் உடன்படிக்கையில் நிர்மாணிக்கப்பட்ட மேற்கூறப்பட்ட தேவைப்பாடுகள் ஈடுசெய்வதற்கு ஹக்பானா - மீலா தல்ஹகனவதுவ வீதியின் தெனஹமவில் 30.49 மீற்றர் நீளத்துடனான 3.65 மீற்றர் அகலத்துடனான பழைய பலாத்திற்காக இது போடப்பட்டது.

(இ) தென்மாகாணத்தில் பொதி - 01 இன் கீழ் பூர்த்தி செய்யப்பட்ட 09 பாரிய பாலங்களின் நிர்மாண வேலைகள் தொடர்பில் 2018 யூலை இல் மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையில் அனைத்துப் பாலங்களின் விரிவான இணைப்புக்களானது முறையாக பொருத்தப்பட்டிருக்கவில்லை எனவும் வீதிகளின் கொண்டுசெல்லும் பாதைகள், நடைபாதைக்கு அருகிலுள்ள கொங்கிறீட் விளிம்பு மற்றும் கைபிடிக்கும் கம்புகள் சேதமடைந்திருந்துது எனவும் வெளிப்பட்டிருந்தது.

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடன் உடன்படிக்கைகளின் பிரிவு 2(1) இன் பட்டியல் 04 இன் கீழ் நிர்மாணிக்கப்பட்ட உறுப்புரிமையானது ஜப்பான் ஒப்பந்தகாரர்களுடனான கூட்டிணைப்பில் ஜப்பான் ஒப்பந்தகாரர்கள் அல்லது கூட்டுமுயற்சியாளர்களானவர்கள் செயற்திட்டத்தின் கீழ்

அமுல்படுத்தப்பட்ட சிவில் நிர்மாண வேலைகளிற்காக விலைக்கூறுகளை சமர்ப்பிப்பதற்கு மாத்திரம் தகுதியுடையவர்களாகவிருந்தார்கள். அதனால், பொதி - 01 இன் கீழ் நிர்மாண வேலைகளிற்காக தனியொரு விலைமனுதாரர் மாத்திரம் பதிலளித்திருந்தார்கள். அதேநேரம் பொதி - 02 இன் கீழ் நிர்மாண வேலைகளிற்காக 03 விலைமனுதாரர்கள் மாத்திரம் பதிவழித்திருந்தார். ஆகையால், கடன் உடன்படிக்கையில் மேற்கூறப்பட்ட உறுப்புரிமையால் செயற்திட்டத்தின் சிவில் நிர்மாண வேலைகளிற்காக விலைமனுக்களை சமர்ப்பித்தல் தொடர்பாக நியாய போட்டிக்கான சந்தர்ப்பங்களானது வரையறுக்கப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்டமானது பொதி - 01 இன் கீழ் 2015 யூன் இலிருந்து 15 மோட்டார் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தியிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 வரை வாடகை கட்டணங்களான ரூபா 218 மில்லியன் தொகை செலவழித்திருந்தது. கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், அதேவகையான மோட்டார் வாகனமானது தற்போதுள்ள சந்தை விலைகளில் ரூபா 121.90 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்படவிருந்தது.

**3.5 பயனற்ற செலவினங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டமானது நிர்மாண வேலைகளிற்காக முறையான அமுலாக்கல் திட்டத்தை தயாரித்திருக்காமையான 09 பிரதான பாலங்கள் ஆரம்பத்தில் கேகாலை, இரத்தினபுரி மற்றும் குருநாகல் மாவட்டங்களில் மீள் நிர்மாணம் செய்வதற்கு இனங்காணப்பட்டு பின்னர் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. ஆகையால், 2016 இல் செயற்திட்டத்தால் மேற்கூறப்பட்ட பாலங்களின் வடிவமைப்புகளிற்காக செலவழிக்கப்பட்ட ரூபா 1.27 மில்லியன் தொகை பயனற்றிருந்தது.

(ஆ) 2015 மார்ச் 20 இல் ரூபா 80.71 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் தொடங்கப்பட்ட கொழும்பு - காலி - அம்பாந்தோட்டை - வெலாவாய வீதியின் பொலதுமொடறவில் ஏனைய பாலத்தின் நிர்மாண வேலைகள் தெரிவுசெய்யப்பட்ட இடத்தின் மந்தமான எல்லை நிலைமையால் பின்னர் வைகவிடப்பட்டிருந்தது. ஆகையால், 2016 வரை அதற்காக செலவழிக்கப்பட்ட ரூபா 17.99 மில்லியன் பயனற்றாகவிருந்தது.

(இ) ரூபா 25.26 மில்லியன் கூட்டுத்தொகையான கட்டுப்பாட்டு கட்டணங்கள் மீளாய்வாண்டின் போது மற்றும் முன்னைய ஆண்டின் போது மீளளிக்கப்படாத கடன் தொகை மீது முறையே கடனளிக்கும் முகவரால் அறவிடப்பட்டிருந்தது.

**3.6 செயற்திட்டத்தின் காணி சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்ற நடவடிக்கைகள்**

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 03 பொதிகளின் கீழ் 13 பாரிய பாலங்களின் நிர்மாணத்துக்காக 178 கிரவுன் காணிகளை உள்ளடக்கி 390 காணித் துண்டுகளை சுவீகரிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், 2017 திசெம்பர் 31 வரையிலும் 69 காணித்துண்டுகள் தொடர்பில் ரூபா 186.04 தொகையான நஷ்டஈடுகள் செலுத்தப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக, மீளாய்வாண்டின் இறுதியளவில் நஷ்டஈடு கொடுப்பனவுகளை தீர்ப்பதன் காலதாமதங்கள் தொடர்பில் வட்டியாக ரூபா 9.38 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**3.7 மனித வளங்கள் முகாமைத்துவம்**

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 61 பதவியணினர்கள் அனுமதிக்கப்பட்டிருந்ததுடன், செயற்திட்ட கண்காணிப்பு பிரிவின் பதவியணியினது மீளாய்வாண்டின் இறுதியில் 36 உறுப்பினர்களை உள்ளடக்கியிருந்தது. பொறியியலாளரொருவர், மற்றும் 09 தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய 25 பதவிகள் 03 ஆண்டுகளிற்கு மேலாக மீளாய்வாண்டின் இறுதியளவில் வெற்றிடமாகவிருந்தது.